சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 26.05.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 107/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-7 |
| சாட்சியின் பெயர் | : | ரவிச்சந்திரன் |
| தந்தை பெயர் | : | சிவசாமி |
| கிராமம் | : | குருங்குளம், தெற்கு தெரு |
| தாலுக்கா | : | நன்னிலம் |
| மாவட்டம் | : | திருவாரூர் |
| தொழில் | : | டைலர் |
| வயது | : | 66 |

2026 ம் ஆண்டு மே மாதம் 26 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

3 முதல் 6 மற்றும் 8 எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.

<u>**முதல் விசாரணை**</u>

நான் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள பேரளம் என்ற ஊரில் டைலர் கடை வைத்துள்ளேன். இந்த வழக்கில் இறந்து போன நாவலன் என்பவரை எனக்கு தெரியும். அவர் திருமிச்சூரை சேர்ந்தவர். கடந்த 19.01.2011 ஆம் தேதி எனக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் நான் என் கடைக்கு செல்லவில்லை. அன்று மாலை 6.45 மணிக்கு வீட்டிலிருந்து பூங்காவூர் சென்றேன். அங்கு இருந்த டீ கடையில் டீ சாப்பிட்டு கொண்டிருந்தேன். பேட்டை பாலூர் என்னிடம் சட்டை தைக்க கொடுத்திருந்தார். அவர் உன்னை பார்த்து சட்டை வாங்கதான் வந்தேன் என்று துரை சாமி சொன்னார். நான் உடல் நிலை சரியில்லாததால் கடைக்கு செல்லவில்லை. சட்டை வேண்டும் என்றால் எடுத்து தருகிறேன் என்று கூறினேன். அதன் பின்னர் இருவரும் இரண்டு சைக்கிளில் பேரளத்தில் உள்ள எனது டைலர் கடைக்கு சென்றோம். எனது டைலர் கடைக்கு கீழமாங்குடி வழியாக சென்றோம். கீழ மாங்குடி மெயின் ரோட்டில் இரவு சுமார் 7.00 மணிக்கு சென்று கொண்டிருந்தோம். அப்போது தண்டந்தோப்பை சேர்ந்த ஸ்டாலின் (8 ம் எதிரி) மற்றும் செல்வம் (9 ம் எதிரி) ஆகிய இருவரும் அங்கு நின்று கொண்டிருந்தார்கள். இவர்கள் இருவரும் எனக்கு முன்னதாகவே தெரியும். ஆஜராகியுள்ள 8 ம் எதிரி தான் ஸ்டாலின் ஆவார். அங்கு நின்று கொண்டிருந்த மேற்படி இரண்டு நபர்களில் 9 ம் எதிரி செல்வத்தை பார்த்து என்னப்பா ஏன் இங்கு நிற்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு செல்வம் நான் ஒரு முக்கியமாக வேலையா வந்திருக்கோம். நீ உன் வேலையை பார்த்து போய்டே இருயா என்று கூறினார். நாங்கள் இருவரும் பேரளம் கடைக்கு சென்றுவிட்டோம். கடைக்கு சென்று துரைசாமிக்கு சட்டை கொடுத்துவிட்டு 1/2 மணியிலிருந்து 1 மணி நேரம் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த நாவலன் என்பவரை கீழ மாங்குடியில் தண்டந்தோப்பை சேர்ந்தவர்கள் வெட்டி கொன்று விட்டதாக கேள்விபட்டேன். வெட்டி கொலை செய்து விட்டார்கள் என்று தெரிந்து கொண்டேன். பின்னர் ஒரு மாதம் கழித்து காவல் நிலையம் சென்று

நாவலன் வெட்டி கொலை செய்யப்பட்ட நேரத்தில் அந்த இடத்தின் அருகே ஸ்டாலின் (8 ம் எதிரி) மற்றும் செல்வம் (9 ம் எதிரி) ஆகியோர்கள் இருந்தார்கள் என சொன்னேன். ஏன் ஒரு மாதம் கழித்து வருகிறாய் என்று சத்தம் போட்டார்கள். பயமாக இருந்ததால் சொல்லவில்லை என்று சொன்னேன். நீதிமன்றத்திற்கு அழைத்தால் சாட்சி சொல்ல வருவாயா என்று கேட்டார்கள். நான் வருவேன் என்று சொன்னேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:** - இல்லை-

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.05.26 15:38:15 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.